ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1792/53 - 2013 ජනවාරි 11 වැනි සිකුරාදා - 2013.01.11

1792/53 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம்

முதலாம் அட்டவணையின் 3 ஆம் விடயத்தின் கீழான கட்டளை

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் முதலாம் அட்டவணையின் 3 ஆம் விடயத்தினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, மின்வலு மற்றும் மின்சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் மீது இக்கட்டளைமூலம் :-

(அ) பொது நோக்கத்திற்காக 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மின்சாரசபை மூலம் தேவைப்படுத்தப்பட்ட இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அக்காணியை அங்கீகரிக்கின்றேன் ; அத்துடன்

(ஆ) (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதல் சட்டத்தின் கீழ் கொள்ளப்படலாம் என்பதுடன் இலங்கை மின்சார சபைக்கு கைமாற்றவும்படலாம்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
மின்வலு மற்றும் மின்சக்தி அமைச்சர்.

கொழும்பு,
2013, சனவரி 10.

#### அட்டவணை

இலங்கையின் தென் மாகாணம், காலி மாவட்டத்தின் இமதுவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கஹந்தக் கிராமத்தின் மேலதிக கிராம அலுவலர் பிரிவு இல. 167ஏ இல் அமைந்துள்ள காணியின் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எச். எல். ஆர். ஜயசுந்தர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2003.05.29 ஆந் திகதியிடப்பட்ட 1182 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டு இலக்கங்கள் 6, 9 மற்றும் 10 என பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு முழுவதும் 0.075 ஹெக்டயார்கள் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் அதன் எல்லைகள் பின்வருமாறு :-

1. காணித்துண்டு இல. 6 - ரிலமுல்லகொட எனவழைக்கப்படும் காணி - விஸ்தீரணம் : 0.025 ஹெக்டயார்கள்.

அதன் எல்லைகளாவன :-

வடக்கு : இக்காணியின் காணித்துண்டு இல. 09 ;
கிழக்கு : வீதிக்காக ஒதுக்கப்பட்ட இக்காணியின் காணித்துண்டு இல. 17 ;
தெற்கு : இக்காணியின் காணித்துண்டு இல. 05 ;
மேற்கு : இக்காணியின் காணித்துண்டு “பீ”

உரிமைகோருபவர் : அகுலுகஹா கமகே லசத் நாமல்.

2. காணித்துண்டு இல. 09 - ரிலமுல்லகொட எனவழைக்கப்படும் காணி - விஸ்தீரணம் : 0.025 ஹெக்டயார்கள்.

அதன் எல்லைகளாவன :-

வடக்கு : இக்காணியின் காணித்துண்டு இல. 10 ;
கிழக்கு : வீதிக்காக ஒதுக்கப்பட்ட இக்காணியின் காணித்துண்டு இல. 17 ;
தெற்கு : இக்காணியின் காணித்துண்டு இல. 06 ;
மேற்கு : இக்காணியின் காணித்துண்டு "பீ"

உரிமைகோருபவர் : அகுலுகஹா கமகே லசத் நாமல்.

3. காணித்துண்டு இல. 10 - ரிலமுல்லகொட எனவழைக்கப்படும் காணி - விஸ்தீரணம் : 0.025 ஹெக்டயார்கள்.

அதன் எல்லைகளாவன :-

வடக்கு : இக்காணியின் காணித்துண்டு இல. 11 மற்றும் வீதிக்காக ஒதுக்கப்பட்ட இக்காணியின் காணித்துண்டு இல. 17 ;
கிழக்கு : வீதிக்காக ஒதுக்கப்பட்ட இக்காணியின் காணித்துண்டு இல. 17 ;
தெற்கு : இக்காணியின் காணித்துண்டு இல. 09 ;
மேற்கு : இக்காணியின் காணித்துண்டு "பீ"

உரிமைகோருபவர் : அகுலுகஹா கமகே லசத் நாமல்.

1-773

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.